### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
# பெருமாள் திருமொழி 9 - வன்தாளினிணை
### (தனயன் வனம் புகத் தசரதன் புலம்புதல்)

730 * வன்தாளினிணை வணங்கி வளநகரம்
தொழுதேத்த * மன்னனாவான்
நின்றாயை * அரியணை மேல் இருந்தாயை *
நெடுங்கானம் படரப் போகு
என்றாள் ** எம் இராமாவோ! * உனைப் பயந்த
கைகேசி தன் சொற்கேட்டு *
நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன் *
நன்மகனே! உன்னை நானே 1

731 வெவ்வாயேன் வெவ்வுரை கேட்டு * இருநிலத்தை
வேண்டாதே விரைந்து * வென்றி
மைவாய களிறொழிந்து தேரொழிந்து
மாவொழிந்து * வனமே மேவி **
நெய்வாய வேல்நெடுங்கண் * நேரிழையும்
இளங்கோவும் பின்பு போக *
எவ்வாறு நடந்தனை? எம் இராமாவோ! *
எம்பெருமான்! என் செய்கேனே! 2

732 கொல்லணைவேல் வரிநெடுங்கண் * கௌசலை தன்
குலமதலாய்! குனிவில்லேந்தும் *
மல்லணைந்த வரைத்தோளா! * வல்வினையேன்
மனமுருக்கும் வகையே கற்றாய் **
மெல்லணை மேல் முன் துயின்றாய் இன்றினிப்போய் *
வியன்கான மரத்தின் நீழல் *
கல்லணை மேல் கண் துயிலக் கற்றனையோ? *
காகுத்தா! கரிய கோவே! 3

733 வா போகு வா இன்னம் வந்து ஒருகால்
கண்டு போ * மலராள் கூந்தல் *
வேய் போலும் எழில் தோளி தன் பொருட்டா *
விடையோன் தன் வில்லைச் செற்றாய் **
மாபோகு நெடுங்கானம் வல்வினையேன் *
மனமுருக்கும் மகனே! * இன்று
நீ போக என் நெஞ்சம் * இருபிளவாய்ப்
போகாதே நிற்குமாறே 4

734 பொருந்தார் கைவேல்நுதி போல் பரல் பாய *

மெல்லடிக்கள்[1] குருதி சோர *
விரும்பாத கான் விரும்பி வெயில் உறைப்ப *
வெம்பசி நோய் கூர ** இன்று
பெரும் பாவியேன் மகனே! போகின்றாய் *
கேகயர் கோன் மகளாய்ப் பெற்ற *
அரும்பாவி சொற்கேட்ட அருவினையேன் *
என் செய்கேன்? அந்தோ! யானே 5

735 அம்மா என்று உகந்தழைக்கும் * ஆர்வச் சொல்
கேளாதே அணிசேர் மார்வம் *
என் மார்வத்திடை அழுந்தத் * தழுவாதே
முழுசாதே[2] மோவாதுச்சி **
கைம்மாவின் நடையன்ன மென்னடையும் *
கமலம் போல் முகமும் காணாது *
எம்மானை என் மகனை இழந்திட்ட *
இழிதகையேன் இருக்கின்றேனே 6

736 பூமருவு நறுஞ்குஞ்சி புன்சடையாய்
புனைந்து * பூந்துகில் சேரல்குல் *
காமரெழில் விழலுடுத்துக் * கலனணியாது
அங்கங்கள் அழகு மாறி **
ஏமருதோள் என் புதல்வன் * யான் இன்று
செலத் தக்க வனம் தான் சேர்தல் *
தூமறையீர்! இது தகவோ? * சுமந்திரனே!
வசிட்டனே! சொல்லீர் நீரே 7

737 பொன்பெற்றார் எழில் வேதப் புதல்வனையும் *
தம்பியையும் பூவை போலும் *
மின்பற்றா நுண்மருங்குல் * மெல்லியல் என்
மருகியையும் வனத்தில் போக்கி **
நின் பற்றா நின் மகன் மேல் பழி விளைத்திட்டு *
என்னையும் நீள்வானில் போக்க *
என் பெற்றாய்? கைகேசீ! * இருநிலத்தில்
இனிதாக இருக்கின்றாயே 8

738 முன்னொரு நாள் மழுவாளி சிலை வாங்கி *
அவன் தவத்தை முற்றும் செற்றாய் *
உன்னையும் உன் அருமையையும் உன் மோயின்
வருத்தமும் * ஒன்றாகக் கொள்ளாது **
என்னையும் என் மெய்யுரையும் மெய்யாகக்

---

[1] மெல்லடிக்கண்

[2] முழுவாதே

கொண்டு * வனம் புக்க எந்தாய்! *
நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன் *
ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே! 9

739 தேனகு மாமலர்க் கூந்தல் * கௌசலையும்
சுமித்திரையும் சிந்தை நோவ *
கூனுருவின் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட *
கொடியவள் தன் சொல் கொண்டு ** இன்று
கானகமே மிக விரும்பி * நீ துறந்த
வளநகரைத் துறந்து * நானும்
வானகமே மிக விரும்பிப் போகின்றேன் *
மனுகுலத்தார் தங்கள் கோவே! 10

740 * ஏரார்ந்த கருநெடுமால் இராமனாய் *
வனம் புக்க அதனுக்கு ஆற்றா *
தாரார்ந்த தடவரைத்தோள் தயரதன்
தான் புலம்பிய * அப்புலம்பல் தன்னை **
கூரார்ந்த வேல்வலவன் கோழியர் கோன் *
குடைக் குலசேகரன் சொற்செய்த *
சீரார்ந்த தமிழ் மாலை இவை வல்லார் *
தீநெறிக்கண் செல்லார் தாமே 11

**அடிவரவு:** வன்தாள் வெவ்வாயேன் கொல்லணை வாபோகு பொருந்தார்
அம்மா பூ பொன் முன் தேன் ஏரார்ந்த அங்கண்